IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.271/2016
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 1.15p.m.

வா.சா.4 சாட்சி செல்வக்குமார் த.பெ. மீனாட்சி

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 18.03.2026 in accordance with the provisions of Act XX141.**

3ம்பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

1. தாவாச் சொத்துக்கள் அம்மச்சியாரம்மன் கோவிலுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். தாவாச் சொத்துக்கு அம்மச்சியாரம்மன் கோவில் சாமி பெயரில் பட்டா இருப்பதற்கு எனக்கு சம்மதம் என்றால் சரிதான். மேற்படி கோவிலுக்கு நிர்வாக அதிகாரி உள்ளார் என்றால் சரிதான். மேற்படி கோவில் இந்து சமய அறநிலையத்துறை நிர்வாகத்திற்கு உள்ளது என்றால் சரிதான்.

2.மேற்படி அமைப்பு ஒரு நிர்வாக அதிகாரியை நியமித்துள்ளார்கள் என்றால் சரிதான். நிர்வாக அதிகாரி எடுக்கும் முடிவுகள்தான் மேற்படி கோவிலுக்கு எடுக்கும் முடிவுகள் என்றால் சரிதான். மேற்படி கோவில், பூசாரி, மற்றும் தாவாச் சொத்துக்கள் நிர்வாக அதிகாரிக்கு கட்டுப்பட்டது என்றால் சரிதான். நிரூபணவாக்குமூலத்தை படித்து பார்த்தேன் என்றால் சரிதான். அதற்கு விபரம் சொன்னது யார் என்றால் யாரும் இல்லை.

3. என்னை சாட்சியம் அளிக்க யார் அழைத்து வந்தார் என்றால் 1ம்வாதி அழைத்து வந்தார். 1ம்வாதி எத்தனை ஆண்டுகளாக பழக்கம் என்றால் நான் பிறந்ததிலிருந்தே பழக்கம். எனது நிரூபணவாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் தவறானது என்றும், வாதி அழைத்ததன்பேரில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல.

**1,2,4,5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

3ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொண்டதாக தெரிவிக்கப்பட்டது.

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்: 1.20 p.m.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.03.18 17:43:41 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
திருமங்கலம்.